மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில்

# 3 நாள் பொங்கல் கலைவிழா

சென்னை, ஜன.10: மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் 3 நாட்கள் பொங்கல் கலைவிழா நடைபெறும் என்று மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை, மெட்ரோ நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் மெட்ரோ பொங்கல் கலைவிழா இந்த ஆண்டு ஜனவரி 10, 11, 12 ஆகிய தேதிகளில் நடக்கிறது. தஞ்சையில் உள்ள தென்னக பயன்பாட்டு மையத்துடன் இணைந்து விழா கொண்டாடப்படுகிறது.

அதன்படி, இன்று சைதாப்பேட்டையிலும், நாளை எழும்பூரிலும், 12ம் தேதி திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்திலும் மாலை 5.30 மணிக்கு தெலங்கானாவை சேர்ந்த அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம் கலைநிகழ்ச்சியும், தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு திருவாரூர் கலைச்சுடர்மணி ஜெகன்நாதன் குழுவினரின் கரகம், காவடி, காளியாட்டம், கொக்கலிக்கட்டை உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளும் நடக்கிறது.

மேலும் இரவு 7.30 மணிக்கு தஞ்சை கலைச்சுடர்மணி ராஜு குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி நடைபெறும். இந்த மூன்று நாள் பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகளை பொதுமக்கள் கண்டு மகிழ மெட்ரோ நிறுவனம் சிறப்பான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இவ்வாறு மெட்ரோ நிர்வாகம் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.